# இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.1, 1.2.2, 1.2.3 மற்றும் 1.2.4 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட முக்கியமான விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவிலும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாதிருந்தது. அதன் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | இலங்கை கணக்கீட்டு நியமத்துடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இ.க.நி. இலக்கம் 05 | அனைத்து இருப்புக்களும் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 24 இருப்பு உருப்படிகளின் பெறுமதி, இறுதி இருப்பிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | இ.க.நி. இலக்கம் 09 | i தொழிற்படு மூலதன மாற்றத்தினை இணக்கம் செய்யும் போது நடைமுறைச் சொத்துக்கள் அதிகரிப்பினை காசுப் பாய்ச்சல் கூற்றில் கழிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டப்பட்டிருந்தது.<br>ii வருமான வரிக்கொடுப்பனவு, பணிக்கொடைச் செலவினக் கொடுப்பனவு என்பன காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.<br>iii ஐயக்கடன் ஏற்பாடு சீராக்கம் செய்யப் பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இ.க.நி. இலக்கம் 10 | இனங்காணப்படாத கடன்பட்டோர் மீதி கணக்குகளில் இருந்து பதிவழித்தல் தொடர்பாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை |
| (ஈ) | இ.க.நி. இலக்கம் 18 | கையேற்கப்பட்ட மற்றும் கைதவிர்க்கப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான பெறுமானத்தேய்வுக் கொள்கை வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

(அ) ஆண்டின் இலாபத்தைக் கணக்கீடு செய்யும் போது அலுவலக உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வு ரூபா 739,534 ஆல் குறைத்தும் மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு ரூபா 182,700 ஆல் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாகன விபத்தொன்றிற்காக கிடைத்த காப்புறுதி இழப்பீட்டுத்தொகை ரூபா 124,475 தொகை உரிய வாகனத் திருத்த செலவினத்திற்கு சீராக்கம் செய்வதற்குப் பதிலாக வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 68,683 தொகையான நன்கொடை செய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதியை அக்கணக்கில் இருந்து அகற்றுவதற்குப் பதிலாக முடிவுப்பொருள் இருப்புக் கணக்கிற்கு செலவு வைத்தமையால் அப்பெறுமானத்தால் கடன்பட்டோர் மீதி கூடுதலாகவும் முடிவுப்பொருள் இருப்பு குறைத்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) குத்தகை அடிப்படையில் தேசிய கால்நடை வளங்கள் சபையிடமிருந்து வழங்கப்பட்டிருந்த பால்விற்பனை நிலைய வருமானமான ரூபா 40,800 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நன்கொடையாக கிடைத்த மருந்து மூலப்பொருட்களிலிருந்து ரூபா 499,155 பெறுமதியான மருந்துகள் பாவனைக்கு எடுக்க முடியாமையால் அப்பெறுமதியை செலவினமொன்றாக காண்பிக்கப்படாமையால் இலாபம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) விளம்பரம் மற்றும் பிரசித்தப்படுத்தல் கட்டணம், இருப்பு மெய்மையாய்வுக் கொடுப்பனவு மற்றும் கடன் விற்பனை என்பன முறையே 98,134, ரூபா 426,462 தொகை மற்றும் ரூபா 142,204 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், பொருளாதார சேவைக் கட்டணம் ரூபா 22,007 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) நிலையான வைப்பிற்கான வட்டி வருமானம் ரூபா 488,715 கூடுதலாக காண்பிக்கப்படாமையால் அப்பெறுமானத்தால் இலாபம் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 213,456 நிலையான சொத்துக்கள் கடன்கொடுத்தோர் மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய ஆண்டின் சீராக்கக் கணக்கில் ஆண்டின் ஆரம்பத்தில் காண்பிக்கப்பட்ட ரூபா 23,027,136 மீதிக்கு 09 கணக்குகளுக்குரிய ரூபா 2,559,308 இற்குரிய வரவு மீதிகளும் 13 கணக்குகளுக்குரிய ரூபா 24,803,946 தொகையான செலவு மீதிகளையும் இனங்காணப்படாமல் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

செயற்பாடல்லாத வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள விற்பனைச்சாலை வருமானங்களின் பெறுமதிகளில் மாதாந்த விற்பனை அறிக்கையின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள வேறுபாடுகள் காணப்பட்டன.

| சேவை வருமானம் | விற்பனை அறிக்கையின் பிரகாரம் | குண-க்கின் பிரகாரம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| விஜேராம விற்பனை நிலையம் | 2,299,550 | 2,151,350 | 148,200 |
| காலி விற்பனை நிலையம் | 25,200 | 12,160 | 13,040 |
| இலைக்கஞ்சி வருமானம் | 424,955 | 412,435 | 12,520 |
| மருந்து பானங்கள் | 38,680 | 35,960 | 2,720 |
| உள்நாட்டு அரிசி | 56,130 | 17,119 | 39,011 |
| விற்பனைச்சாலை விற்பனைகள் | 35,118,743 | 33,984,198 | 1,134,545 |

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

பின்வரும் கணக்கு விடயங்கள் ஒவ்வொன்றின் முன்னே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| மிகையூதியக் கொடுப்பனவிற்கான ஏற்பாடு | 59,375 | விரிவான பட்டோலை |
| அழிந்த பொருளுக்கான ஏற்பாடு | 2,213,229 | பட்டோலை |
| தொழிலை இழந்த ஊழியர் களுக்கான நட்டஈடு வழங்கல் | 1,131,347 | - மேற்படி - |
| 2005 இற்கு முன்னர் வருமான வரி நிதிஏற்பாடு | 8,015,988 | - மேற்படி - |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கக் கணக்கு | 37,829,242 | விரிவான பட்டோலை |
| வீட்டு வாடகை முற்பணம் | 271,126 | உறுதிச்சீட்டுக்கள் |
| கிடைக்க வேண்டிய வருமானம் | 750,797 | பட்டோலை |
| கடன்பட்டோர் | 24,653,149 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| முடிவுப்பொருள் இருப்பு | 50,823,731 | தொழிற்சாலைக் கிரயம் கணக்கிடப்பட்ட முறை |

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணக் கோவை (நி.பி) | |
| நி.பி 316 | நாவின்ன விற்பனை நிலையத்தில் தற்போது விநியோகிக்கப்படாத அதிகளவிலான பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் பாதுகாப்பற்றுக் காணப்பட்டன. |
| நி.பி 341 | நாவின்ன விற்பனை நிலையத்தில் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் பயன்பாட்டிற்கு எடுத்தல் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 396(ஈ) | 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 218,872 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 1645(அ) | வாகனங்களின் சம்பவப் பதிவேடுகள் முறையாக பூர்த்தி செய்யப்படாமை |
| நி.பி 1647(உ) மற்றும் நி.பி 11 தொகுதியின் vi. உப பட்டோலை | நிறுவனத்திடமுள்ள வாகனங்கள் தொடர்பாக வாகனப் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அரச வாகனங்களுக்கு அரசாங்க இலட்சினையை பொறிக்கப்பட வேண்டிய போதிலும், 59-3140 கெப் வண்டி மற்றும் 253-9314 ஆம் இலக்க வான் வண்டியிலும் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரச வியாபாரச் சுற்றறிக்கை | |

| | | | |
|---|---|---|---|
| | 8.3.3.1 ஆம் பந்தி | | திறைசேரியின் அங்கீகாரமின்றி கூட்டுத்தா பனத்தின் ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 25,170,347 செலுத்தப்பட்டிருந்தது. |
| | 9.2 ஆம் பந்தி | | மனிதவள முகாமையாளர் II ஆம் தரத்திற்காகவும் நிதி முகாமையாளர் II ஆம் தரத்திற்காகவும் பத்திரிகை விளம்பரத்தினை மேற்கொண்டு அதற்காக ரூபா 252,392 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இவ்வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 சனவரி 26 ஆம் திகதிய என்பீஏ 8 தேசிய கொள்வனவு முகவராண்மையின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.11 ஆம் பிரிவு | | நல்லெண்ணைய் தொடர்பாக கேள்வி நடைமுறையின் போது கேள்விப் பாதுகாப்பு முறியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | 3.5 ஆம் பிரிவு | | நல்லெண்ணைய் கொள்வனவின் போது ஒரு வழங்குனரிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதன்போது உரிய நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| | 5.4.8 ஆம் பிரிவு | I | ரூபா 10,254,750 பெறுமதியான 30,250 கி.கிராம் நல்லெண்ணைய் கொள்வனவின் போது செயலாற்றல் பிணைபொறுப்பொன்று பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன், உடன்படிக்கை செய்யப்பட்ட வழங்கல் இடம்பெற்றிருக்கவில்லை. |
| | | II | 2010 ஆம் ஆண்டின் போது கப்பலேற்றுவதற்கு முன்னர் மாதிரி நிராகரிக்கப்பட்ட ஆனால் இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 485,036 பெறுமதியான அசமோதகத்திற்குப் பதிலாக ரூபா 485,033 பெறுமதியான குங்குமப் பூ கொண்டு வரப்பட்டிருந்ததுடன், இதனை கொள்வனவுக் |

| | | |
|---|---|---|
| | | குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1990 பெப்ரவரி 19 ஆம் திகதிய திட்ட அமுலாக்கல் அமைச்சு செயலாளரின் கடிதம் | சட்ட அலுவல்களுக்காக சட்டமா அதிபர் மூலம் மேற்கொள்ளக்கூடியதாக இருந்த வழக்கொன்றிற்காக ரூபா 276,768 வெளிவாரி சட்டத்தரணிக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 63,878,705 தொகையான தேறிய இலாபமாக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 6,016,390 உடன் ஒப்பிடும் போது ரூபா 57,862,315 அதிகரிப்பொன்று தென்பட்டது. எவ்வாறாயினும் செயற்பாடல்லாத வருமானத்தைக் கணக்கிடுவதற்கு மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் ரூபா 48,536,407 தேறிய இலாபத்தை பெற்றுக்கொண்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கான செயற்பாடல்லாத வருமானமான ரூபா 5,646,893 ஐ கணக்கிடுவதற்கு முன்னர் தேறிய இலாபம் ரூபா 369,497 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் தேறிய இலாப அதிகரிப்பு ரூபா 57,862,315 ஆக இருந்ததுடன், இறுதி இருப்பு ரூபா 31,876,686 ஆல் அதிகரித்தமை, ரூபா 10,695,200 தொகையான மூலப்பொருள் நன்கொடை கிடைத்தமை மற்றும் மீளாய்வாண்டில் மருந்துகளின் விற்பனை விலை அதிகரிக்கப்பட்டமை அதற்குப் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

(ரூபா ஆயிரங்களில்)

| | 2011 | 2010 | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| விற்பனைகள் | 358,677 | 316,029 | 42,648 | 13.4 |
| விற்பனைக் கிரயம் | 201,333 | 288,488 | (87,155) | (30.2) |
| மொத்த இலாபம் | 157,344 | 87,540 | 69,804 | 7.97 |
| மொத்த இலாப % | 43.87 | 27.70 | 16.17 | 58.38 |
| செயற்பாடல்லாத வருமானம | 15,200 | 5,108 | 10,092 | 197.57 |
| நிலைய நிர்வாகச் செலவு | 78,225 | 63,043 | 15,182 | 24.08 |
| விற்பனை, விநியோகச் செலவு | 30,859 | 21,389 | 9,470 | 44.27 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 281,309 | 231,880 | 49,429 | 21.31 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 45,793 | 65,412 | 19,619 | 29.99 |
| இலாபத்தின் அடிப்படையில் வருமான வரி | 18,524 | 1,203 | 17,321 | 1439.8 |
| வரி கழிக்கப்பட்ட பின் இலாபம் | 45,353 | 4,813 | 40,540 | 842.3 |

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

| திரவ விகிதம் | நியம விகிதம் | 2011 | 2010 |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 | 6.14:1 | 2.29:1 |
| சொத்து விரைவு விகிதம் | 1:1 | 3.66:1 | 5.24:1 |
| இருப்பு புரள்வு விகிதம் (தடவை) | | 4.73 | 6.6 |

கூடிய திரவ விகிதம் அவதானிக்கப்பட்டதுடன், தொழிற்படு மூலதனத்தில் குறுங்கால முதலீடொன்று காணப்பட்டமையால் மிகை தொழிற்படு மூலதன நிலைமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் மதிப்பிடப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூபா 343,598,676 ஆக இருந்ததுடன், உள்ளவாறான உற்பத்திக் கிரயம் ரூபா 247,289,253 ஆக இருந்தது. மதிப்பிடப்பட்ட உற்பத்தி அலகுகள் மற்றும் உள்ளவாறான அலகுகளுக்கிடையே கீழே காட்டப்பட்டுள்ள விலகல் அவதானிக்கப்பட்டன.

| உற்பத்தி | மதிப்பிடப்பட்ட உற்பத்தி | உள்ளவாறான உற்பத்தி | சாதக / பாதக விலகல் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | அலகுகள் | அலகுகள் | | % |
| அரிஷ்ட (மி.லீ. 750 போத்தல்) | 230,400 | 140,351 | (89,949) | (39) |
| ஆசாவ (மி.லீ. 750போத்தல்) | 148,800 | 124,483 | (24,317) | (16) |
| மருந்து தூள் (கிராம்) | 34,094 | 23,823 | (10,271) | (30) |
| கல்க லேகியம் (கிராம்) | 21,445 | 18,606 | (2,839) | (13) |
| புதிய உற்பத்தி | 11,884 | 5,050 | (6,834) | (57) |
| குவாத (மி.லீ. 750போத்தல்) | 131,639 | 71,603 | (60,036) | (46) |
| இரச (கிராம்) | 3,402 | 1,978 | (1,424) | (42) |
| சிரப் (மி.லீ. 750போத்தல்) | 32,797 | 21,812 | (10,985) | (33) |
| தைலம் (மி.லீ. 750போத்தல்) | 176,226 | 134,490 | (41,736) | (24) |
| வெடி குகுள் (கிராம்) | 18,772 | 12,114 | (6,658) | (35) |

(ஆ) மீளாய்வாண்டில் போது கூட்டுத்தாபனத்தின் மதிப்பிடப்பட்ட விற்பனைகள், உள்ளவாறான விற்பனைகள் மற்றும் அதனுடன் ஒப்பிடு செய்யும் போது கீழே காட்டப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை.

| | மதிப்பிடப்பட்ட விற்பனைகள் | உள்ளவாறான விற்பனைகள் | பாதக விலகல் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | --------- | --------- | ---------- | ----- |
| | ரூபா | ரூபா. | ரூபா | % |
| அரச துறை | 337,992,008 | 247,591,997 | (90,400,011) | (27) |
| தனியார் துறை | 124,311,000 | 111,085,939 | (13,225,061) | (11) |
| | ----------- | ----------- | ----------- | ---- |
| திரட்டிய விற்பனை | 462,303,008 | 358,677,936 | (103,625,072) | (22) |
| | ========== | ========== | =========== | ==== |

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கீழே காட்டப்பட்டுள்ள உற்பத்திகளின் விற்பனை மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்தது.

| உற்பத்தி | 2011ஆம் ஆண்டு | 2010 ஆம் ஆண்டு | வித்தியாசம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| ---------- | ------------- | ------------- | ------------------ | ------------ |
| | (அலகு) | (அலகு) | (அலகு) | % |
| அரிஷ்ட | 125362 | 159576 | (34214) | 21.40 |
| ஆசவ | 109512 | 148595 | (39083) | 26.30 |
| லேகியம் | 7472 | 9031 | (1,559) | 17.26 |
| மருந்து தூள் | 64574 | 67848 | (3274) | 4.83 |

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது சகல உற்பத்தி வகைகளின் விலையை 10% ஆல் அதிகரித்தமை விற்பனை வருமானம் அதிகாரிப்பதற்கு காரணமாக இருந்தது. எவ்வாறாயினும் அரிஷ்ட, ஆசவ, லேகியம் மற்றும் மருந்து தூள் உற்பத்திகளின் விற்பனை குறைவடைந்திருந்ததுடன், புதிய உற்பத்திகளின் விற்பனை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளின் அதிகரிப்பானது விலை அதிகரிப்பால் ஏற்பட்டதேயன்றி வினைத்திறனால் ஏற்பட்டதல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

(அ) ரூபா 1,971,201 தொகையான செலவில் தாபிக்கப்பட்டிருந்த கணக்கீட்டு மென்பொருட்கள் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அதற்காக வருடாந்த சேவைச் செலவினமாக ரூபா 133,669 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வயின் உற்பத்திக்காக கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,011,767 பெறுமதியான 24,780 போத்தல்களும் ரூபா 667,500 பெறுமதியான 30,000 தக்கைகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், தற்போதய இயலளவின் பிரகாரம் அது 17 ஆண்டுகளுக்கு போதுமாக இருக்கும்.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சுத்தமாக்கப்படாத இரசத்திற்காக வருடாந்த தேவைப்பாட்டிற்காக கொள்வனவு சபை அங்கீகரித்திருந்த அளவினை விட கூடுதலாக 43 கிலோ கொள்வனவு செய்து அதற்காக ரூபா 416,130 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) ஆகக் குறைந்த விலை விபரங்கள் அனுப்பப்பட்ட எனினும் மாதிரி நிராகரிக்கப்பட்டிருந்த ஏனைய வழங்குனர்களிடமிருந்தும் திருப்திகராமன வழங்குனர்களிடமிருந்தும் நல்லெண்ணைய் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 1,047,270 தொகையான மதிப்பிடப்பட்ட நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) நல்லெண்ணைய் கொள்வனவு செய்வதற்காக ரூபா 339 மற்றும் ரூபா 349 ஆன விலைகளைச் சமர்ப்பித்த வழங்குனர்கள் நிராகரிக்கப்பட்டு ரூபா 352 விலையைத் தெரிவு செய்தமையால் ரூபா 352 ஏற்பட்ட மதிப்பீட்டு நட்டம் ரூபா 393,250 ஆகும்.

(இ) மீளாய்வாண்டின் போது மூலிகைத் தோட்டங்களிலிருந்து ஏற்பட்ட நட்டம் ரூபா 1,357,498 ஆக இருந்தது.

(ஈ) ரூபா 119,536 பெறுமதியான அமுக்கரிஷ்ட நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் உற்பத்தி செய்யப்படாமையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 199,777 பெறுமதியான காமேஸ்வரி மோதகப் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் சேதமடைந்திருந்தது.

(ஊ) வருடாந்த கொள்வனவு சபை தீர்மானத்தின் பிரகாரம் மருந்து மூலிகைகளைக் கொள்வனவு செய்யும் போது தற்போதய சந்தை விலை கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், வெள்ளைப் பூண்டு கொள்வனவின் போது தற்போதைய சந்தை விலை கருத்திற் கொள்ளப்படாமையால் ரூபா 75,000 நிதிசார் நட்டமேற்பட்டிருந்தது.

(எ) கடமை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த ஊழியர் ஒருவரால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 2,380,500 தொகை கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தது.

(ஏ) ஆண்டின் கட்டளை திகதியை விஞ்சி வழங்கப்பட்டிருந்த மருந்து மூலப்பொருட்களுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 33,832 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ரூபா 4,736,916 தொகையான காலாவதியான கடன்பட்டோர் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக திறைசேரியால் காண்பிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் மற்றும் தேவைப்பாடுகளுக்கு இணங்காமையால், அறவிட முடியாக்கடன் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 4,305,720 தொகையும் ஆண்டின் இலாபத்தில் ரூபா 431,196 தொகையும் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஒ) 20 ஆண்டுகளாக இருந்து வரும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தீர்வையாகாத ரூபா 898,187 பெறுமதியான காசோலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 தாமதமான செயற்திட்டங்கள்

(அ) 2011 ஆம் ஆண்டில் ஆய்வுகூட பரிசோதனைக்காக ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 141,667 தொகை செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் இடையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

| | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| ரஜரட்டை தொழிற்சாலை நிர்மாணம் | 1,775,095 |
| களஞ்சியத் தொகுதி நிர்மாணம் | 225,056 |

### 3.6 பதவியணி நிர்வாகம்

நிதி முகாமையாளர், உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் வழங்கல் முகாமையாளர் ஆகிய பதவிகளை நிரப்பாமல் அப்பதவிகளில் கடமை மேவுகை செய்வதற்காக வேறு முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 4. கணக்களிதன்மையும் சிறந்த ஆளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வு தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தால் கணக்கு 2012 ஏப்ரல் 05 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) களஞ்சியம் மற்றும் இருப்புக் கட்டுப்பாடும்
(ஆ) விற்பனை நிலையங்களின் விற்பனை
(இ) கிரயக் கணக்கீடு
(ஈ) பதவியணி முகாமை
(உ) உற்பத்தி ஊக்குவிப்புப் படி
(ஊ) கணக்கீட்டு மென்பொருள் பொதியின் பயன்பாடு